வணிகவியல்

நேரம் : 3 மணி   பனிரெண்டாம் வகுப்பு   மொத்த மதிப்பெண் : 200

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :   20 X 1 = 20

1. கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுவது :
(அ) கிராமப்புறங்களில் மட்டும்   (ஆ) நகரங்களில் மட்டும்
(இ) மாநில தலைநகரங்களில் மட்டும்   (ஈ) நகர்புறங்களிலும் ,கிராமப்புறங்களிலும்

2. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு :
(அ) வாரிய அமைப்பு (ஆ) பொதுக்கூட்டுரு (இ) துறைமுறை அமைப்பு (ஈ) அரசு நிறுமம்

3. தனியாள் வணிகம் துவங்க :
(அ) குறைந்தது ஒருவர் தேவை (ஆ) குறைந்தது இருவர் தேவை (இ) ஒரு நபர் மட்டும் தேவை

4. கூட்டாண்மை பதிவு :
(அ) கட்டாயம்   (ஆ) விருப்பத்தின் பேரில்   (இ) அவசியம் இல்லை

5. கூட்டாண்மையின் அடிபடைக் கூறு :
(அ) பூரண நல்ல நம்பிக்கை   (ஆ) கூட்டாளிகளிடையே உறவு   (இ) கூடி தொழில் செய்தல்

6. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை :
(அ) உரிமையர் மற்றும் வேலையாளர்   (ஆ) முதல்வர் மற்றும் முகவர்
(இ) எஜமானர் மற்றும் பணியாளர்

7. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பவர், அதன் :
(அ) கடனாளர்கள் (ஆ) உறுப்பினர்கள் (இ) கடன் வாடிக்கையர் (ஈ) நிறுமத்தினல் கடன்

8. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது :
(அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும்   (ஆ) வாக்குரிமையைச் செலுத்துவதில்
(இ) பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போழ்து பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்

9. பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை :
(அ) 2   (ஆ) 5   (இ) 7   (ஈ) 10

10. ஒரு நிருமத்தின் செயல்பாட்டு எல்லையை உணர்த்தும் ஆவணம் :
(அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு (ஆ) நிறுமச் செயல் விதிகள் (இ) தகவலறிக்கை
(ஈ) சட்டமுறை உறுதி விளம்பர்

11. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு : (அ) ரூ. 5,000 க்கு   (ஆ) ரூ. 5,00,000 க்கு   (இ) ரூ. 50,000 க்கு   (ஈ) ரூ.500 க்கு

12. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி :
(அ) 12 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்   (ஆ) 15 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்   (இ) 18 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்

13. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் :
(அ) சட்டமுறைக் கூட்டத்தில் உறுப்பினர்களால்   (ஆ) நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால்   (இ) நிறுமப் பதிவாளரால் நியமிக்கப்படுகின்றனர்

14. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது :
(அ) சரக்கு   (ஆ) சேவை   (இ) நிதி பத்திரங்கள்   (ஈ) நாட்டின் பணம்

15. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் :
(அ) கலைமான்   (ஆ) கரடி   (இ) காளை   (ஈ) முடவாத்து

16. செபியில், சபைத் தலைவர் மற்றும் வாரியத்தின் ------------------- உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றது:
(அ 6   (ஆ) 5   (இ) 7   (ஈ) 3

17. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது :
(அ) கிராமங்களில் (ஆ) மாவட்டத் தலைநகரங்களில் (இ) மாநிலத் தலைநகரங்களில்
(ஈ) நகர்ப்புறங்களில்

18. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது :
(அ) கடன் (ஆ) சேவை (இ) சரக்குகள் (ஈ) ரொக்கம்

19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் :
(அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக்கழகம் (இ) அரசு நிறுமம்

20. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது :
(அ) மைய அல்லது மாநிலஅரசின் சட்டம் (ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956 (இ) அரசாணை
(ஈ) அரசியல் அமைப்பு சாசனம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 20 X 1 = 20

21. ------------------ அமைப்பின் மேலாண்மை அரசங்கத்தால் நியமிக்கபட்ட ஒரு குழுவிடம் உள்ளது.

22. தனி வணிகரின் பொறுப்பு ----------------------- ஆகும்

23. தனியாள் வணிகம் என்பது -------------- முதலுடனும் , அனுபவத்துடனும் இயங்கும் ஒரு அமைப்பாகும்.

24. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு -------------- .

25. உழைக்கும் கூட்டாளியை ------------------- எனவும் அழைப்பர்.

26. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் --------------- பங்கு பெறவும் உரிமையுண்டு.

27. --------------- வடிவத்திலுள்ள உடன்பாடு பிற்காலத்தில் கூட்டாளிகளுக்கிடையே எழும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க உதவுகிறது.

28. தனிவரையறு நிறுமத்தில் குறைந்தது ------------------- இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.

29. வழக்கமாகப் பெறக்கூடிய நிலையான வீதப் பங்காதாயத்துடன், கூடுதல் பங்காதாயம் பெற உரிமையுள்ள பங்குகள் ------------------ பங்குகள் என அழைக்கப்படும்.

30. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது --------------------- .

31. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான ----------------------- .

32. நிறுமத்தின் வாழ்வு காலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் --------------- ஆகும்.

33. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க, வருகை தரவேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை -------------- எனப்படும்.

34. இந்தியாவில் ----------------- பிராந்திய பங்கு மாற்றகங்கள் உள்ளன.

35. புதிய பங்குகளை வெளியிடுவதற்கு நிறுமங்கள் ------------------ சேவையை நாடுகின்றன.

36. தீர்வுப் பத்திரங்கள் --------------- எனவும் அழைக்கப்படும்.

37. இந்தியாவில் முதல் சிறப்பங்காடி ------------- யில் தொடங்கப்பட்டது.

38. ------------------ என்பது பேரளவில் செயல்படும் சில்லரை வணிக அமைப்பாகும்.

39. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ---------------- நிருவாகம் செய்கின்றது.

40. பொதுக் கழகங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசின் ---------------- உருவாக்கப்படுகின்றன.

III. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி : 10 x 4 = 40

41. ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன ?

42. பொதுக் கூட்டுரு என்றால் என்ன ?

43. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?

44. கூட்டாண்மை ஒப்பாவனம் என்றால் என்ன ?

45. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.

46. நீடித்த வாழ்வு என்றால் நீவிர் அறிவது யாது ?

47. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும் ?

48. சிறப்புத் தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும் ?

49. பதிலாள் என்றால் என்ன ?

50. பட்டியலிடுதலின் பயன்கள் யாவை ?

51. முதலீட்டாளர் என்பவர் யார் ?

52. தமிழ்நாட்டிலுள்ள கூட்டறவு சிறப்பங்காடிகள் யாவை ?

53. ஆதரவு பங்காதயம் என்றால் என்ன ?

54. முன்னாளில் அரசின் கடமையாக கருதப்பட்டவை யாவை ?

55. அரசுத் தொழில் என்பதின் வரைவிலக்கணத்தைக் கூறுக.

IV. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்க : 5X 8 = 40

56. சுருக்கமாக விடையளிக்கவும் : அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்.

57. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை ?

58. கூட்டண்மைக்கும் , நிருமத்திற்கும் இடையேயான வேறுபாடுகளில் ஏதேனும் எட்டு எழுதுக.

59. பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள் யாது ?

60. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வேண்டின், என்ன நிபந்தனைகள் தேவை ?.

61. பொது துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள ஏதேனும் எட்டு வேறுபாடுகளை பட்டியலிடுக.

62. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகள் ஏதேனும் எட்டு எழுதுக .

63. ஊக வணிகர்களின் வகைகளை விவரி .

V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க : 4 X 20 = 80

64. (அ). ஏதேனும் ஐந்து வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) துறைவாரி அமைப்பின் இயல்புகளையும், நிறைகளையும் விளக்குக.

65. (அ) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி.

(அல்லது)

(ஆ) விளக்க குறிப்பு தருக : (i) மாற்று இயக்குநர் (ii) சட்டமுறைக்கூட்டம்
(iii) நிகழ்ச்சி நிரல் (iv) ஆண்டுப் பொதுக் கூட்டம்

66. (அ) கூட்டாண்மையின் நிறைகள் எவையேனும் பத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கூட்டுறவு அமைப்பின் சிறப்பியல்புகளில் ஏதேனும் பத்து பற்றி விவரித்து எழுதுக.

67. (அ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் பத்து எழுதுக. (அல்லது)

(ஆ) செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள் ஆகியவற்றை விளக்குக.